



நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் ஆலந்தூர் தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் தா.மோ.அன்பரசன் ஆலந்தூர் வடக்கு பகுதி, 158வது வட்டத்தில் தேர்தல் பணியாற்றிய கழக நிர்வாகிகளுக்கும் இயக்கத் தோழர்களுக்கும் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். உடன் ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாமன்ற உறுப்பினர் பாரதி வெங்கடேசன், மாவட்ட வர்த்தக அணி துணைச் செயலாளர் குமரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.





திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவேற்காடு நகரம் மற்றும் பூவிருந்தவல்லி நகர தி.மு.க. சார்பில் கோடை வெப்பத்தை தணிக்க உதவும் வகையில் திருவேற்காடு பேருந்து நிலையத்தில், பூவிருந்தவல்லி குமணன்சாவடி ஆகிய பகுதியில் தண்ணீர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி நகரச் செயலாளர்கள் என்.இ.கே.மூர்த்தி, ஜி.ஆர்.திருமலை ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு, தண்ணீர் பந்தலை திறந்து வைத்து இளநீர், மோர், ரோஸ் மில்க், பாதாம் மில்க், தண்ணீர், பழம் வகைகள் வழங்கினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞர் அணி இணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், நிர்வாகிகள்காயத்திரி ஸ்ரீதர், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர், ப.ச.கமலேஷ், டி.முரளி கிருஷ்ணன், ஏ.ஜெ.பவுல் உள்பட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

# த.வெ.க.வுடன் காங். கூட்டணி - சந்தர்ப்பவாத அரசியல்!

## முன்னாள் ஒன்றிய அமைச்சர் மணிசங்கர் ஐயர் கடும் விமர்சனம்!



புதுடெல்லி, மே 11-

முன்னாள் ஒன்றிய அமைச்சரும் மூத்த காங்கிரஸ் தலைவருமான மணிசங்கர் ஐயர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

விஜயின் த.வெ.க. கட்சியுடன் கூட்டு சேர்ந்ததன் மூலம் காங்கிரஸ் ஒழுக்கக்கேடான செயலை செய்ததோடு, அவருக்குப் பெரும்பான்மை கிடைப்பதை உறுதி செய்யாததன் மூலம் அரசியல் முட்டாள்தனத்தையும் செய்துள்ளது. ஆக, தொங்கு சட்டமன்றம் உருவாகியுள்ளது.

நாங்கள் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறோம். சில நாட்களுக்கு முன்பு நாம் போட்டியிட்ட 23 தொகுதிகளிலும் நம்மை எதிர்த்து போட்டியிட்ட அதே த.வெ.க.வுடன் கூட்டணி அமைத்துள்ளோம். அதில் 5 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளோம். தேர்தலில் எந்த கட்சியை எதிர்த்து போராடினோமோ அதில், நம்முடன் சேர்ந்து கடுமையாக போராடிய தி.மு.க.வை விட்டு விட்டு த.வெ.க. வுடன் கை கோர்த்தது பயங்கரமானது.

இந்த முடிவில் ஒரு வித அரசியல் சாதுரியமும் அடங்கியுள்ளது. ஏனெனில் தி.மு.க. கூட்டணி யிலிருந்து காங்கிரஸ் விலகினால், கூட்டணியின் மற்ற சிறிய கட்சிகளும் விலகிவிடும் என்று நினைத்தது. ஆனால், அவர்களில் யாரும் விலகாததால், நாங்கள் முற்றிலும் ஒரு நிச்சயமற்ற நிலையில் விடப்பட்டுள்ளோம். விஜயுடன் இணைந்து ஒழுக்கக்கேட்டை நாம் செய்துவிட்டோம்.

ஆனால் அவருக்குப் பெரும்பான்மை கிடைப்பதை உறுதி செய்யாத அரசியல் முட்டாள்தனத்தையும் செய்துவிட்டோம். அதனால், தொங்கு சட்டமன்றம் உருவாகியுள்ளது. நாம் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறோம். இது பொது அறிவா, நல்ல அரசியலா, அல்லது நல்ல ஒழுக்கமா? இவ்வகையான சந்தர்ப்பவாத அரசியல் எந்த அளவுகோலைப் பூர்த்தி செய்கிறது. இந்த வகையான அரசியலுடன் நம்மால் முன்னேறிச் செல்ல முடியும் என்று நான் நினைக்கவில்லை.

இவ்வாறு மணிசங்கர் ஐயர் கூறினார்.

### கூட்டுக் குடிநீர்த்திட்ட

# குழாய்களில் ஏற்பட்டுள்ள உடைப்பை சரிசெய்க !

## பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை!



நாகை, மே 11-

கூட்டுக் குடிநீர் திட்ட குழாய்களில் ஏற்பட்டுள்ள உடைப்பை சரிசெய்ய வேண்டும் என்று மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம்,கீழ்வேளூர், வேதாரண்யம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு ராட்சத குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த ராட்சதக் குழாய்களில் ஆங்காங்கே உடைப்பு ஏற்பட்டு நீர் கசிவு உருவாகி வருகிறது. குறிப்பாக நாகூர் வெட்டாற்றின் மீது செல்லக் கூடிய ராட்சத குழாயில் இருந்து ஏராளமான இடங்களில் உடைப்பு ஏற்பட்டு பெருமளவில் நீர் கசிந்து வருவது குறித்து பல்வேறு புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக பல்வேறு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் தாமதம் ஏற்படும் அபாயம் இருக்கிறது.

எனவே இதை உடனடியாக கவனத்தில் கொண்டு கூட்டுக் குடிநீர் குழாய்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை கண்டறிந்து அவற்றை சரி செய்யுமாறு மாவட்ட ஆட்சியரை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சென்னை புறநகரில் விடிய விடிய பெய்த மழை: விமான சேவைகள் பாதிப்பு!

சென்னை, மே 11-

கடும் வெயில் வாட்டி வதைத்து வந்த நிலையில், சென்னை, புறநகரில் விடிய விடிய மழை பெய்தது. இதனால், பூமி குளிர்ந்து ரம்மியமான சூழல் நிலவியது.

சென்னை, புறநகரில் கடந்த இரு வாரங்களாக கடும் வெயில் வாட்டி வதைத்து வந்தது. கடந்த சில தினங் களாக சென்னையில் 100 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு மேல் வெப்ப நிலை பதிவாகி வந்தது. இதனால், பொதுமக்கள் பகல் நேரங்களில் வெளியில் செல்ல முடியாமலும், இரவில் புழுக்கத்தால் தூங்க முடியாமலும் அவதிப்பட்டு வந்தனர்.

இந்நிலையில், 7ம் தேதி நள்ளிரவு மற்றும் 8ம் தேதி காலை ஆங்காங்கே விட்டு விட்டு மழை பெய்தது. இதன் தொடர்ச்சியாக, சென்னை, புறநகரில் நேற்று அதிகாலை நேரத்தில் பரவலாக மழை பெய்தது. காலையிலிருந்து லேசான தூரல் மழை பெய்தது.

இதனால், காலை முதலே மாநகர், புறநகர் பகுதிகளில் குளிர்ச்சியான சூழல் நிலவியது. அதனைத் தொடர்ந்து நேற்று பிற்பகலிலும் சென்னை, புறநகர் பகுதிகளில் மீண்டும் மழை பெய்து, சாலையில் மழைநீர் ஓடியது.

சாலையோரங்களில் ஆங்காங்கே மழைநீர் தேங்கியது. நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக, நுங்கம்பாக்கம், டிஜிபி அலுவலகம், எண்ணூர், சோழிங்க நல்லூரில் தலா 2 செ.மீ, தண்டையார் பேட்டை, எம்ஜிஆர் நகர், பெரம்பூர், சைதாப்பேட்டை, சென்னை ஆட்சியர் அலுவலகம், வில்லிவாக்கம், அண்ணா பல்கலைக் கழகம் ஆகிய இடங்களில் தலா 1 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

விமான சேவைகள் பாதிப்பு: சென்னையில் மழை காரணமாக நேற்று மோசமான வானிலை நிலவியதால், சென்னை விமான நிலையத்தில் விமானங்கள் தரையிறங்க முடியாமல், நடுவானில் வட்டமடித்து கொண்டிருந்தன. பெங்களூர், மும்பையில் இருந்து வந்த இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் உட்பட 5 விமானங்கள் சென்னையில் தரையிறங்க முடியாததால், அந்த விமானங்களை பெங்களூருக்கு திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சிறிது நேரத்தில் வானிலை சீரானதும், விமானங்கள் சென்னையில் தரையிறங்கின.

அதேநேரம், சென்னையில் இருந்து அகமதாபாத், டெல்லி, கண்ணூர், தூத்துக்குடி, கோவை, சேலம் உள்ளிட்ட 10 இடங்களுக்கு செல்ல இருந்த விமானங்கள் பலத்த மழையால் தாமதமாக புறப்பட்டன. சென்னை விமான நிலையத்தில் மொத்தமாக 15க்கும் மேற்பட்ட விமான சேவைகள் பாதிக்கப்பட்டதால், பயணிகள் அவதிக்குள்ளாகினர்.

# பஞ்சலிங்க அருவியில் திடீர் வெள்ளப்பெருக்கு!

## சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை!

திருப்பூர், மே 11-

திருப்பூர் மாவட்டம் உடுமலையிலிருந்து சுமார் 22 கிமீ தொலைவில் திருமூர்த்தி மலை உள்ளது. இங்கு புகழ்பெற்ற அமணலிங்கேஸ்வரர் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு தினசரி ஏராளமான பக்தர்கள் வந்து வழிபட்டு செல்கின்றனர்.

உடுமலை சுற்றுவட்டாரப் பகுதியிலிருந்து மட்டுமின்றி, வெளியூர்களில் இருந்தும் ஏராளமானோர் வருகின்றனர். குறிப்பாக அமாவாசை, பௌர்ணமி உள்ளிட்ட விசேஷ நாட்களில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். கோவிலுக்கும், பஞ்சலிங்க அருவியில் குளித்து மகிழவும் சுற்றுலாப் பயணிகளும், பக்தர்களும் அதிக அளவில் வருகின்றனர். குறிப்பாக வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை தினங்களில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிக அளவில் இருக்கும்.

நேற்று முன்தினம் இரவு பெய்த கனமழையால் அருவிக்கு நீர்வரத்து அதிகரித்தது. இந்நிலையில் மேற்கு தொடர்ச்சி மலையில் கன மழை பெய்தது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேற்று முன்தினம் பஞ்சலிங்க அருவியில் குளிக்க யாரும் அனுமதிக்கப்படவில்லை. தண்ணீர் வரத்தை கண்காணித்து வருவதாகவும் நிலைமை சீரானால் சுற்றுலா பயணிகள் அருவிக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்றும் கோவில் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

### உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட

# அதிநவீன ஏவுகணை சோதனை வெற்றி!



புதுடெல்லி, மே 11-

குறுகிய தூர இலக்குகளை தாக்கும் வகையில் உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட அதி நவீன ஏவுகணையை ஒடிசாவில் நேற்று இந்திய விஞ்ஞானிகள் வெற்றிகரமாக சோதித்து பார்த்தனர்.

அதிவிரைவாக செயல்பட்டு நிலத்தில் இருந்து வானில் உள்ள இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கும் வகையில் ராணுவ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கழக (டிஆர்டிஓ) விஞ்ஞானிகள் இந்த ஏவுகணையை மேம்படுத்தியுள்ளனர். 25 முதல் 30 கி.மீ தூரம் வரை சென்று, ஒன்றுக்கும் மேற்பட்ட எதிரிகளின் இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கும் திறன் படைத்தது என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கெனவே கடந்த ஜூன் 4ம் தேதி முதல் முறையாக சோதனை நடத்தப்பட்ட நிலையில், 2வது முறையாக ஒடிசாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை மையத்தில் நிறுத்தப்பட்டிருந்த நடமாடும் செலுத்து வாகனம் மூலம் நேற்று காலை 11.30 மணியளவில் விண்ணில் ஏவி சோதித்து பார்க்கப்பட்டது. ஏவுகணையின் திறனை மதிப்பீடு செய்யும் வகையில் மீண்டும் இந்த சோதனை நடத்தப்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

சோதனை வெற்றிகரமாக முடிந்ததை அடுத்து, பாதுகாப்புத் துறை அமைச்சர் அருண் ஜேட்லி, டிஆர்டிஓ விஞ்ஞானிகளுக்கு வாழ்த்து தெரிவித்தார். நிலத்தில் இருந்து விண்ணில் பாயும் ஏவு கணை உருவாக்கத்தில் இதுவொரு முக்கியமான மைல் கல் என்றும் பாராட்டினார்.

டிஆர்டிஓ செயலாளர் டாக்டர் எஸ்.கிறிஸ்டோபரும், சோதனையை வெற்றிகரமாக நடத்திய விஞ்ஞானிகளுக்கு வாழ்த்து தெரிவித்தார். ஏவுகணை சோதனையின் போது ராணுவ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சோதனை கூடத்தின் இயக்குநர் எம்எஸ்ஆர் பிரசாத், பாதுகாப்பு அமைச்சரின் அறிவியல் ஆலோசகர் டாக்டர் ஜி.சதீஷ் ரெட்டி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களும் உடனிருந்தனர்.

# உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர விருப்பம்!

## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தகவல்!

வாஷிங்டன், மே 11-

உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவர விரும்புவதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெள்ளை மாளிகையில் அதிபர் ட்ரம்ப் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது, அமெரிக்க அதிபராக பொறுப்பேற்ற பிறகு இதுவரை 9 போர்களை நிறுத்தியுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார். 10வது போராக ரஷ்யா உக்ரைன் இடையிலான மோதலை நிறுத்த விரும்புவதாகவும் ட்ரம்ப் கூறினார். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உக்ரைன் போரில்தான் அதிக அளவிலான உயிரிழப்புகள் ஏற்பட்டு வருவதாகவும் மாதந்தோறும் 25 ஆயிரம் ராணுவ வீரர்கள் கொல்லப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ரஷ்யாவின் வெற்றி தினத்தையொட்டி மே 11 வரை 3 நாட்களுக்கு போர் நிறுத்தம் அமல்படுத்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய ட்ரம்ப், போரை நிறுத்த உக்ரைன் மற்றும் ரஷ்யாவுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் விரைவில் போர் முடிவுக்கு கொண்டுவரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# தேர்தல் ஆணையத்தின் “எஸ்.ஐ.ஆர்.” முறைகேடுகளுக்கு எதிர்ப்பு!

## எஸ்.ஐ.ஆர். தீர்ப்பாய நீதிபதி டி.எஸ்.சிவஞானம் ராஜினாமா!

புதுடெல்லி, மே 10–

தேர்தல் ஆணையத்தின் S.I.R. முறைகேடு களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, S.I.R. தீர்ப்பாய நீதிபதி டி.எஸ். சிவஞானம், தனது பதவியை ராஜினாமா செய்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு வங்க மாநிலத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிட்ட போது, 90 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். இதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், நிராகரிக்கப்பட்ட வாக்காளர்கள் மேல்முறையீடு செய்ய ஏதுவாக, 19 தீர்ப்பாயங் களை உச்சநீதிமன்றம் அமைத்தது.

இதனிடையே, எஸ்.ஐ.ஆர். தொடர்பான தீர்ப்பாய நீதிபதியாக நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி டி.எஸ். சிவஞானம், கொல்கத்தா மற்றும் 24 வடக்கு பர்கானாஸ் மாவட்டங்களில் உள்ள தொகுதிகளின் வாக்காளர்கள் மனுக்களை பரிசீலித்து வந்தார்.

நீதிபதி சிவஞானம் ஆயிரத்து 717 மனுக்களை ஆய்வு செய்து அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என பரிந்துரை செய்திருந்தார்.

ஆனால் தேர்தல் ஆணையம் ஆயிரத்து 607 பெயர்களை மட்டுமே வாக்காளர் பட்டியலில் சேர்த்தது.

இந்த நிலையில், தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து, நீதிபதி டி.எஸ். சிவஞானம் ராஜினாமா செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மீது - ஈரான் ஏவுகணைத் தாக்குதல்!

வாஷிங்டன், மே 11-

ஈரான், இஸ்ரேல், அமெரிக்கா இடையே கடந்த ஏப்ரல் 8ம் தேதி முதல் தற்காலிக போர் நிறுத்தம் அமலில் உள்ளது. இந்த சூழலில் ஹார்முஸ் ஜலசந்தியில் மூன்று கடற்படை கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதாகவும் அதனை இடைமறித்து தாக்குதல் நடத்தியதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. மேலும் ஈரான் ராணுவ தளங்களை குறிவைத்து பதிலடி கொடுத்தாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே ஐக்கிய அரபு அமீரகமும் ஈரான் தாக்குதல் நடத்தியதாக தெரிவித்துள்ளது. ஈரானின் ஏவுகணை மற்றும் டிரோன்கள் தாக்குதல்களுக்கு தகுந்த பதிலடி கொடுத்து இடைமறிக்கப்பட்டதாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் குறிப்பிட்டுள்ளது.

போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒரு ஒப்பந்தத்தை இரு தரப்பினரும் பரிசீலித்து வரும் நிலையில் இந்த தாக்குதல் ஈரான் மற்றும் அமெரிக்கா இடையேயான போர் நிறுத்தத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.